


27. 01. 2026

தலைப்புச் செய்திகள்

- இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையே வரலாற்று சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.
- இந்திய ஐரோப்பிய யூனியன் வர்த்தக ஒப்பந்தம் புதிய அத்தியாயத்திற்கு வழிகோலியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- இளம் பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கி வைத்தார்.
- திருச்சி மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 34 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி உள்ளதாக மாநில அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.
- புலவாயோவில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 6 பிரிவில் ஸிம்பாப்வேக்கு எதிராக இந்தியா முதலில் பேட்செய்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையில் வரலாற்று சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுதில்லி ஹைதராபாத் இல்லத்தில் கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தின் மூலம் இருதரப்பிற்கும் இடையே புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மற்றும் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் ஆண்டனியோ கோஸ்டா மற்றும் இந்தியா – ஐரோப்பிய யூனியன் தலைவர் உர்சுலா வாண்டர் லேயனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று புதுதில்லியில் மேற்கொண்டார்.

இந்த ஒப்பந்தம் அனைத்து ஒப்பந்தகங்களின் முன்னோடியானது என்று தெரிவித்துள்ள ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வாண்டர்லேயன் இதன் மூலம் இருதரப்பிலும் 2 பில்லியன் மக்கள் பயன்பெறுவார்கள் என்றார்.

இந்த இருதரப்பு ஒப்பந்தத்தால் புதிய அத்தியாயம் தொடங்கி இருப்பதாக கூறியுள்ள அவர், இந்தியா ஐரோப்பிய யூனியன் இடையே அரசியல் ரீதியிலான நட்புணர்வு மேலும் வலுப்படும் என்றார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உற்பத்தி மற்றும் சேவை பிரிவிற்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

கோவாவில் இந்தியா எரிசக்தி வாரத்தை ஒட்டி காணொலி வாயிலாக இன்று உரையாற்றிய பிரதமர், இத்துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ள நாடாக திகழும் இந்தியாவின் தேவைகள் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

இந்திய – ஐரோப்பிய வர்த்தக ஒப்பந்தம் உலகின் இரு பெரிய பொருளாதார நாடுகள் இடையிலான ஒருங்கிணைப்பு என்று பெருமிதம் தெரிவித்த பிரதமர், உலகளாவிய வர்த்தகம் மற்றும் விநியோக சங்கிலியில் மூன்றில் ஒருபகுதி இதன்மூலம் சாத்தியமாவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் எரிசக்தி துறையில் உள்ள வாய்ப்புகளை ஆய்வு செய்து உலகிலுள்ள திறன்மிகு முதலீட்டாளர்களை ஈர்ப்பதன் அவசியத்தையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

எரிசக்தி பிரிவிற்கான பேச்சுவார்த்தைகள் மற்றும் செயலாக்கத்திற்கான தளமாக இந்த எரிசக்தி வாரம் திகழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.

3 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் எரிசக்தி பாதுகாப்பு, முதலீடு உள்ளிட்ட பிரிவுகளில் பல்வேறு அமர்வுகள் இடம்பெறுகின்றன.

120 நாடுகளை சேர்ந்த 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

ஐரோப்பிய யூனியன் இடையிலான இந்தியாவின் வளரும் நட்புறவின் மூலம் பாதுகாப்பு ஒத்துழைப்பு மேம்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் உடனான பேச்சுவார்த்தைகளின் போது இதனை தெரிவித்த திரு. திரு. ராஜ்நாத் சிங், உலகளவில் நெருக்கடி சூழலிலும் இந்த நட்புறவு மேம்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பில் இந்தியா உறுதிபூண்டிருப்பதாக திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஐரோப்பிய ஆணையத்தின் துணைத்தலைவர் திரு. காஜா கலாஸ் இந்தியா ஐரோப்பிய யூனியனின் வலுவான நட்புறவு பாதுகாப்பு ஒத்துழைப்பில் முக்கிய மைல் கல்லாக திகழ்கிறது என்றார்.

இதனிடையே புதுதில்லியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு அதிகாரிகளிடையே இன்று உரையாற்றிய திரு. ராஜ்நாத் சிங் நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்தி நவீன தொழில் நுட்பங்களை உருவாக்குவதில் இந்த அமைப்பு இன்றியமையா பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

விமான கட்டமைப்பு, செயற்கை கோள், ராணுவ தளவாடங்கள், நவீன தொழில் நுட்பங்கள் பிரிவில் 45 ஆய்வகங்கள் இந்த அமைப்பின் கீழ் இயங்குவதாக பெருமிதம் தெரிவித்தார்.

மாறிவரும் நவீன உலக சூழலில் தொழில் நுட்பங்களும், நவீனத்துடன் இருப்பதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், பொதுத்துறை நிறுவனங்கள் தொழிற்சாலைகள், கல்வி

நிறுவனங்கள் இடையே ஒருங்கிணைப்பின் மூலம் ராணுவ சூழலை வலுப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அனைத்து கட்சி கூட்டம்

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குவதை ஒட்டி அனைத்து கட்சிக்கூட்டம் மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பை கோரி இந்த கூட்டம் நடைபெற்றது.

மாநிலங்களவையின், அவை முன்னவர் திரு. ஜே.பி.நட்டா,

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு,

இணையமைச்சர்கள் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால், டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. ஜெயராம் ரமேஷ்,

திமுகவின் திரு. திருச்சி சிவா,

திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் திரு.சகரிகா,

சமாஜ்வாடி கட்சியின் திரு. ராம்கோபால் யாதவ் உள்ளிட்டோரும் இதில் கலந்து கொண்டனர்.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவின் உரையுடன் நாளை தொடங்கும் பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் கட்ட கூட்டம் அடுத்தமாதம் 13-ம் தேதிவரை நடைபெறுகிறது.

2026-27-ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை வரும் ஞாயிற்றுக்கிழமை மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.

இரண்டாவது கட்ட பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் மார்ச் 9-ம் தேதியிலிருந்து ஏப்ரல் 2-ம் தேதி வரை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

வேலைநிறுத்த போராட்டம்

நாடுமுழுவதும் வங்கி ஊழியர்கள் ஒருநாள் வேலைநிறுத்த போராட்டத்தில் இன்று ஈடுபட்டுள்ளனர்.

வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே பணி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போராட்டம் நடைபெறுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வங்கி ஊழியர்கள் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருவாரூரில் பாரத ஸ்டேட் வங்கி முன்பு வங்கி ஊழியர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் இளம் பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை நந்தம்பாக்கத்திலிருந்து முதலமைச்சர் துவக்கி வைத்த இந்த திட்டத்தின் மூலம் அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி உள்ளிட்ட
4 மாவட்டங்களில் இந்த திட்டம் செயலாக்கத்திற்கு வந்துள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

பெண் குழந்தைகளின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் ஒத்துழைப்புடன் தகுதியுள்ள அனைத்து பெண்களுக்கும், சுகாதார களப்பணியாளர்கள் மூலம் HPV தடுப்பூசி போடப்படுகிறது.

முன்னதாக உலக மகளிர் உச்சிமாநாட்டை இன்று தொடங்கி வைத்து பேசிய முதலமைச்சர், புதிய தொழில் முதலீடுகள் மூலம் மகளிர் அதிகளவில் வேலைவாய்ப்பு பெறுவதாக கூறினார்.

சமூகத்தின் முதுகெலும்பாக பெண்கள் திகழ்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக மாநில அரசு எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வருவதாக கூறியஅவர், புதுமைப்பெண் திட்டத்தால் உயர் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதோடு கிராமப் புறங்களிலும் பெண் தொழில் முனைவோர் அதிகளவில் உருவாகி வருவதாக கூறினார்.

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு பாதுகாப்பு திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

மகளிர் மட்டும் பயணிக்கும் வகையில் 5 வழித்தடங்களில் 10 இளஞ்சிவப்பு நிற பேருந்துகளின் சேவையை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

மகளிரால் இயக்கப்படும் இளஞ்சிவப்பு பிங்க் ஆட்டோ சேவை மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கான வாகன சேவையையும் முதலமைச்சர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

திருச்சி மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளாக 34 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல்படுத்தி உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணாக்கருக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கி உரையாற்றிய அமைச்சர், ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பேருந்து நிலையம், நவீன நூலகங்கள் உள்ளிட்டவை இந்த வளர்ச்சித் திட்டங்களில் அடங்கும் என்றார்.

திருச்சியில் உள்ள 9 சட்டமன்ற தொகுதிகளில் எட்டில் அரசு கலைஅறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கல்வி மற்றும் சுகாதாரத்திற்கும் அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாகவும்,

உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கையில் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சிதலைவர் திரு. சரவணன், திருச்சி மாவட்டத்திற்கான மாநில அரசின் திட்டங்களை எடுத்துரைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

தீ விபத்து

சென்னை விமான நிலையத்தின் உணவகம் அருகே ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் விமானங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு துறையினர் அப்பகுதியில் தீயணைக்கும பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் மீன் வளத்தை பெருக்க 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை பவளப் பாறைகள் கடலில் அமைக்கும் பணிகள் இன்று தொடங்கின.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

புலவாயோவில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 6

பிரிவில் ஸிம்பாப்வேக்கு எதிராக முதலில் பேட்செய்யும் இந்தியா சற்றுமுன் 9 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 96 ரன் எடுத்திருந்தது

முன்னதாக டாஸ் வென்ற ஸிம்பாப்வே பந்து வீச தீர்மானித்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖